**வாக்குமூலம்**
**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,**
**மேட்டூர்,**
**தேதி: 16.02.2026**
**OS. No. 01/2015**
**வழக்கு சாட்சி PW.2– மாணிக்கம், த/பெ.கந்தப்ப கவுண்டர்**

(சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து 6, 7 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார் )

**6, 7 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

1) நான் நேரிடியாக வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என் மனைவி தான் தாக்கல் செய்துள்ளார். இந்த வழக்கு பிரதிவாதிகள் காவேரி சின்னதம்பி (எ) கோவிந்தசாமி, பழனிசாமி, கிருஷ்ணவேணி, மாரியம்மாள் ஆகியோர்கள் மீது தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த வழக்கில் என்ன பரிகாரம் கேட்கப்பட்டுள்ளது என்றால் எங்கள் நிலத்தில பிரதிவாதிகள் யாரும் அத்துமீறி நுழைந்து தொந்தரவு செய்யக்கூடாது என்று பரிகாரம் கோரி இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அந்த ஒரு பரிகாரம் தான் கேட்கப்பட்டுள்ளதா என்றால் ஆமாம். தாவா சொத்தின் சர்வே எண் என்னவென்றால் ச.எண்.85/11C, 85/5, 85/6 ஆகும்.

2) ச.எண். 85/11C ஆனது எவ்வளவு விஸ்தீரணம் என்றால் 32 சென்ட் ஆகும். அதன் சக்குபந்தி தற்போது பழனிசாமி, ரகுநாதன் நிலங்களுக்கு கிழக்கு, புறம்போக்கு நிலத்திற்கு மேற்கு, ஓடைக்கு தெற்கு, ஹரி வகையறா மற்றும் லட்சுமி நிலத்திற்கு வடக்கு ஆகும். ச.எண்.85/5 ல் மொத்தம் 1–1/2 சென்ட் நிலம் ஆகும். அதன் சக்குபந்தி விவரம் மாரிமுத்து வகையறா நிலத்திற்கு தெற்கு, ஓடைக்கு வடக்கு, மீதி நிலத்திற்கு கிழக்கு, ரங்கம்மாள் நிலத்திற்கு மேற்கு ஆகும். ச.எண்.85/6 ல் மொத்தம் 7–1/2 சென்ட் நிலம் ஆகும். அதன் சக்குபந்தி விவரம் மீதி நிலத்திற்கு வடக்கு, மாரிமுத்து நிலத்திற்கு தெற்கு, ச.எண்.85/5 க்கு மேற்கு, ச.எண்.85/7 க்கு கிழக்கு ஆகும்.

3) மேற்கண்ட சொத்துக்கள் என் மனைவி லட்சுமி பெயருக்கு 1ம் பிரதிவாதி காவேரியிடமிருந்து கிரையம் பெற்றதாகும். மேற்கண்ட சொத்துக்கள் 1ம் பிரதிவாதி காவேரி கிரையம் பெற்ற சொத்தாகும். அதை அவர் அவரது பங்காளிகளிடமிருந்து

கிரையம் பெற்றார், அவர்கள் பெயர் எனக்கு நினைவில்லை. 1ம் பிரதிவாதி காவேரிக்கு மேற்படி சொத்துக்கள் கிரையம் மூலம் பாத்தியம் என்று என் நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேனா என்றால் பட்டா மூலம் பாத்தியம் என்று சொல்லியுள்ளேன். 1ம் பிரதிவாதி கிரையம் பெற்றதாக நான் சொல்லவில்லை என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி காவேரி, 3ம் பிரதிவாதி சின்னதம்பி (எ) கோவிந்தசாமி, 4ம் பிரதிவாதி பழனிசாமி மற்றும் 1ம் பிரதிவாதி காவேரியின் இறந்த மகன் ஒருவர் ஆகியோர்கள் சேர்ந்து நாங்கள் கிரையம் பெறுவதற்கு முன்பு தாவா சொத்துக்களை 19.08.1994ல் என் மனைவியான வாதி லட்சுமியிடம் அடமானம் வைத்திருந்தார்கள். அந்த அடமான பத்திரத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன்.

4) வா.சா.ஆ.11 அடமான பத்திரத்தில் லட்சுமியாகிய உங்களுக்கு பெருமாள் கவுண்டர் மகன் காவேரி 1, அவருடைய மேஜர் மகன் கோவிந்தசாமி 2, மைனர் பழனிசாமி 3 ஆகியோர்கள் மட்டும் தான் எழுதி கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். அந்த மூன்று நபர்களை தவிர வேறு யாரிடமும் கையொப்பம் பெறவில்லை என்றால் சரிதான், 1ம் பிரதிவாதி காவேரி பெயரில் தான் பட்டா இருந்தது. 6ம் பிரதிவாதி மாரியம்மாளின் கணவர் நடராஜன் 1996ல் இறந்துவிட்டார் என்றால் சரிதான். மேற்கண்ட ஆவணத்தில் 6ம் பிரதிவாதி மாரியம்மாள் தரப்பினர் இல்லை என்றால் சரிதான். நாங்கள் தாவா சொத்துக்களை யார் யாரிடமிருந்து கிரையம் பெற்றோம் என்றால் 1ம் பிரதிவாதி காவேரியிடமிருந்து மட்டும் தான் கிரையம் பெற்றோம். 1ம் பிரதிவாதி காவேரி தாவா சொத்திற்கும், பூர்வீக சொத்திற்கும் சம்மந்தமில்லை என்று சொன்னதன் பேரிலும், அவர் பெயரில் தனிபட்டா எண்.28 மற்றும் 804 ஆகியவை அவருக்கு தனிப்பட்ட முறையில் பாத்தியப்பட்டதன் பேரில் வழங்கப்பட்டதாக தெரிவித்ததன் அடிப்படையில் கிரையம் பெற்றோம்.

5) மேற்படி சங்கதிகள் வா.சா.ஆ.1 கிரைய பத்திரத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான், பத்திர எழுத்தரிடம் தெரிவித்தோம். ஆனால் அவர் எழுதவில்லை. வா.சா.ஆ–1 கிரைய பத்திரத்தில் 1ம் பிரதிவாதி காவேரிக்கு பட்டா மூலம் பாத்தியப்பட்டதாகவும், அனுபவம் உள்ளதாகவும் தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், எதன் அடிப்படையில்

பட்டா வழங்கப்பட்டது என்று எவ்வித குறிப்பும் இல்லை என்றால் சரிதான், வில்லங்கம் எதுவும் இருக்கும்பட்சத்தில் சரி செய்து கொடுப்பதாக அவரே ஒப்புக்கொண்டுள்ளார். உண்மையான வாரிசுதாரர்கள் யாரிடமும் நாங்கள் கிரைய பத்திரத்தில் கையொப்பம் பெறாததால் வா.சா.ஆ.1 கிரைய ஆவணமானது சட்டப்படி செல்லதக்கதல்ல என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதிக்கு 7 வாரிசுகள் உள்ளனர் என்றும், அவர்கள் யாரிடமும் நாங்கள் கிரைய பத்திரத்தில் கையொப்பம் பெறாமல் மோசடியாக தயார் செய்துள்ளோம் என்றால் சரியல்ல.

6) வா.சா.ஆ–11 அடமான பத்திரத்திலும் காலம் சென்ற நடராஜன் மனைவியான 6ம் பிரதிவாதி மாரியம்மாள் மற்றும் அவரது மகள் கிருஷ்ணவேணி ஆகியோரிடம் கையொப்பம் பெறாததால் வா.சா.ஆ.11 அடமான பத்திரமும் சட்டப்படி செல்லாது என்றால் சரியல்ல. எந்த சமயத்தில் நாங்கள் புகார் கொடுத்தோம் என்றால் 2014ல் புகார் கொடுத்தோம். அதன் பேரில் கிருஷ்ணவேணி, மாரியம்மாள், தேவராஜ் ஆகியோர் பெயரில் குற்றவழக்கும் பதிவு செய்யப்பட்டுள்ளது. அந்த வழக்கில் காட்டிற்குள் யாரும் நுழையக்கூடாது என்று தீர்ப்பானதாக மேற்கண்ட வழக்கை பார்த்து வந்த அரசு வழக்கறிஞர் தெரிவித்தார். இந்த வழக்கின் 6, 7 பிரதிவாதிகள் மீது தாக்கல் செய்யப்பட்ட இ.த.ச.பிரிவுகள்.447, 427, 506(2) கீழான வழக்கானது முழு விசாரணைக்கு பிறகு குற்றவாளி இல்லை என்று சொல்லி தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் எனக்கு தெரியவில்லை.

7) பின்னிட்டு 6, 7 பிரதிவாதிகள் இந்த வழக்கின் மற்ற பிரதிவாதிகளான காவேரி, அம்மாசி, கோவிந்தராஜ், பழனிசாமி, சரசு ஆகியோர் மீது இந்நீதிமன்றத்தில் அ.வ.எண்.247/2012 என்ற பாகபிரிவினை வழக்கு தாக்கல் செய்தார்கள் என்றால் எனக்கு தெரியாது. அந்த வழக்கும் மாரியம்மாளுக்கும், கிருஷ்ணவேணிக்கும் பாகம் உள்ளதாக தீர்ப்பாகி விட்டது என்றால் எங்களுக்கு விற்ற தாவா சொத்தை தவிர்த்து மற்ற சொத்துக்களில் பாகம் உள்ளதாக தீர்ப்பில் சொல்லப்பட்டுள்ளது. அவ்வாறு தீர்ப்பு எதுவும் வழங்கவில்லை என்றும், நான் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. மேற்கண்ட சங்கதிகள் அனைத்தையும் தீர்மானித்துதான 6, 7 பிரதிவாதிகளுக்கு பங்கு

உள்ளதாக தீர்ப்பு வழங்கப்பட்டது என்றால் சரியல்ல. மேற்கண்ட தீர்ப்பில் நான் எந்த மாறுதலும் செய்ய இயலாது என்றும், இந்த தாவா சொத்துக்களிலும் 6, 7 பிரதிவாதிகளுக்கு பங்கு உள்ளது என்று சொல்லப்பட்டுள்ளதால் வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல. நான் கிராம நிர்வாக அலுவலராக பணி செய்தேன். என் மீது ஒழுங்கு நடவடிக்கை ஏதேனும் எடுக்கப்பட்டதா என்றால் எடுக்கப்பட்டது, ஆனால் தள்ளுபடி செய்யப்பட்டது. அவ்வாறு தள்ளுபடி எதுவும் செய்யப்படவில்லை என்றும், என் மீது சாட்டப்பட்ட குற்றசாட்டானது நிரூபணம் செய்யப்பட்டதன்பேரில் என்னை பணியிலிருந்து நீக்கம் செய்து விட்டார்கள் என்றும், அதன் அடிப்படையில் ஓய்வூதிய பலன்களும் வழங்கவில்லை என்றும், நான் சுத்தமான கரங்களுடன் நீதிமன்றத்தை அனுகவில்லை என்றும், அதனால் வழக்கானது அதிகபட்ச செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

ஒம்/—திரு. M.செல்வம்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.